வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 05.03.2026 வியாழக்கிழமை இதழ் : 59 பக்கங்கள் : 08

# அமெரிக்காவின் நீரடி தாக்குதலில் ஈரானியப் போர்க் கலம் நிர்மூலம்!


## காலியை அண்டிய கடற்பரப்பில் சம்பவம்


- 80 பேரின் சடலங்கள் மீட்பு: 32 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி
- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நடத்திய மிகப்பெரும் கடற் தாக்குதல் என அமெரிக்கா பெருமிதம்.
- கடற்கலம் முற்றாக நீரில் மூழ்கடிப்பு

கொழும்பு, மார்ச் 05

இந்து சமுத்திரத்தில் - இலங்கையின் காலிக் கடற்பகுதிக்கு அண்மையாகக் கரையிலிருந்து 40 கடல் மைல் தொலைவில் ஈரானிய போர்க்கலம் ஒன்று ஐக்கிய அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கலமொன்றின் தாக்குதலால் நீரில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கா மேற்கொண்ட மிகப்பெரும் வெற்றிகரக் கடற் தாக்குதல் என்று வர்ணித்திருக்கும் அமெரிக்க பாதுகாப்புத் துறை

07



## மனிதாபிமான அடிப்படையில் ஈரான் கப்பலுக்கு உதவினோம்!

### அமைச்சர் விஜித ஹேரத் விளக்கம்

கொழும்பு, மார்ச் 05

கடலில் ஆபத்தில் இருக்கும் எவருக்கும் அவர்களின் தேசியத்தைப் பாராது மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டியது இலங்கையின் கடமையாகும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித்தலைவரால் முன்வைக்கப்பட்ட நிலையியல் கட்டளையின் கீழான கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று (நேற்று) அதிகாலை இலங்கைக் கடல் எல்லைக்கு அப்பால் ஈரானிய கடற்படைக்குச்

07

## ஐக்கிய அரபு இராச்சியம் மீது தாக்குதல் வருத்தம் தெரிவித்தார் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, மார்ச் 05

ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கு, அநுரகுமார திஸாநாயக்க நேற்று தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு, அந்நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் வருத்தம் தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அந்த நாட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து எனது வருத்தத் தைத் தெரிவித்துக் கொண்டேன். அனைத்து வகையான வன்முறைகளையும்

07

## போர்ச்சூழலால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கம் குறித்து ஜனாதிபதி ஆராய்வு!

கொழும்பு, மார்ச் 05

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்போதைய போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் அதை நிர்வகிக்க எடுக்கக்கூடிய உடனடி நடவடிக்கைகள் குறித்து

07



## தையிட்டியில் போராடியோர் மீது தாக்குதல் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 05

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவேளை கைது செய்யப்பட்டவர்கள் மீது தாம் குறைந்தளவு பல பிரயோகத்தையே மேற்கொண்டதாக மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

தையிட்டி விகாரைக்கு எதிராக கடந்த டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் வேலன் சுவாமி, வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஷ் , வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட ஐவர் மீது தாக்குதலை மேற்கொண்டு பொலிஸார் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான வேலன் சுவாமி மற்றும் வலி. கிழக்கு தவிசாளர்

07

## ஈரான் உயர் தலைவர் கமெனியின் மறைவுக்கு விஜித ஹேரத் இரங்கல்

கொழும்பு, மார்ச் 05

ஈரானின் ஆன்மீக உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மறைவையொட்டி, இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசு தூதரகத்துக்கு விஜயம் செய்த அமைச்சர், அங்கு

07



## யாழுக்கு கடத்தப்பட்ட கஞ்சர் படகுடன் ஒருவர் கைதானார்!

### இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ்ப்பாணத்தில் 368 கிலோ கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் , அவருடன் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட இருவர் தப்பி சென்றனர். அவர்களை கைது

07

## ஈரான் தூதரகம் சென்றார் சஜித்

கொழும்பு, மார்ச் 05

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பிற்பகல் இலங்கையிலுள்ள ஈரான் தூதரகத்திற்குச் சென்று இலங்கைக்கான ஈரானிய தூதரைச் சந்தித்து, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தற்சமயம் நடந்து வரும் போர்ச்சூழலால் உயிரிழந்த ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அலி கமெனி மற்றும் ஈரானியர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும்

07

## 300,000 லீற்றர் பெற்றோல் இன்றும் யாழ். வருகிறது!

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ்ப்பாணத்துக்கு இன்று வியாழக்கிழமையும் சுமார் 3 இலட்சம் லீற்றர் பெற்றோல் எடுத்து வரப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 5 நாட்களுக்கு மேலாக பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருக்கும் நிலையில், நேற்று புதன்கிழமையும் சுமார் 3 இலட்சம் லீற்றர் பெற்றோல் கொலன்னாவலையில் இருந்து எடுத்து வரப்பட்ட போதிலும் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது.

இந்நிலையில் இன்று வியாழக்கிழமையும் 2 இலட்சத்து, 90 ஆயிரத்து 400 லீற்றர் பெற்றோல் எடுத்து வரப்பட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 36 எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டியிலிருந்து கடலுக்கு சென்ற இரு மீனவர்கள் கரை திரும்பவில்லை

**• கடற்படையினரும் தேடுதல் நடத்தவில்லை**

யாழ்ப்பாணம், மார்ச் 05

தையிட்டி பகுதியில் இருந்து கடந்த 27ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற மீனவர்கள் இருவர் இதுவரை திரும்பி வரவில்லை என அவர்களது உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தங்கராசா அமல்ராஜ் (வயது 44), செல்வராசா ராஜ்குமார் (வயது-30) என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மீனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கையில்-

அவர்கள் கடலில் இரண்டு நாட்கள் தங்கி இருந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கரையை வந்தடைந்திருக்கவேண்டும். இருப்பினும் இன்றுவரை திரும்பி வரவில்லை.



அவர்கள் இருவரையும் நேற்று முன்தினம் இந்திய மீனவர்கள் கடலில் கண்டதாகவும், அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தாகவும் கூறினர். இந்திய எல்லையில் நின்றால் இந்திய கடற்படையினர் கைது செய்து விடுவார்கள் என்றும், ஆகையால் கரையோரமாகச் செல்வதாகவும் அவர்கள் தங்களுக்கு கூறிவிட்டு சென்றதாக இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நாங்கள் கடற்படையினர், பொலிஸார் என அனைவருக்கும் தெரியப்படுத்தியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கவில்லை.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் காணாமல்போன நிலையில் அவரை உலங்குவானூர்தி மூலம் மீட்டனர். அதுபோல இவர்களையும் ஏன் காப்பாற்றக்கூடாது? இதுவரை கடற்படை எந்தவொரு தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

இதுவரை 3500 லீற்றர்கள் எரிபொருளை பயன்படுத்தி நாங்களே தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டோம். எல்லை தாண்டிச் சென்று தேடவும் முடியாது. நாங்கள் தேடி சென்றவேளை இந்தியக் கடற்படையினர் எங்களை விரட்டினர்.

எனவே அவர்களை உயிருடன் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர்.

(அ-05)

## 800 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த இரண்டு பேர் ஏழாலை பகுதியில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 05

800 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த இருவர் நேற்று அதிகாலை சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த இருவரும் அதிகளவான டீசலை அதிக விலையில் விற்பனைக்காக பதுக்கி வைத்திருப்பதாக சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவர்களிடமிருந்து 800 லீற்றர் டீசல், டீசலை பதுக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட கொள்கலன் என்பன பொலிஸால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

## மீனவர்களுக்கு எரிபொருளை விநியோகிக்க அரசு ஏற்பாடு!

கொழும்பு, மார்ச் 05

கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை உரியவாறு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான நிலமை ஓரிரு வாரங்களில் வழமைக்கு திரும்பம் என அமைச்சர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு கடற்றொழிலாளர்கள் ஏதேனும் சிக்கலை எதிர்நோக்கினால், அதனை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று காலை திருவள்ளுவர் குருபூசை



யாழ்ப்பாணம், மார்ச் 05

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மாசி உத்தர நட்சத்திர நாளான நேற்று புதன்கிழமை திருவள்ளுவர் குருபூசை இடம் பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக கலாசாலை வளாகத்தில் அமைந்திருக்கும் திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றும் மலர் வணக்கம் மேற்கொள்ளப்பட்டும் மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும் தமிழ் அறிஞருமாகிய கந்தையா தர்மராஜா அதிதி பேச்சாளராக கலந்துகொண்டு வள்ளுவத்தைப் போற்றுவோம் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தனுஷாயினி தேவராஜா முன்னிலைப்படுத்தினார்.

வள்ளுவர் பற்றி ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணக் காணொளி காட்சிப்படுத்தப்பட்டது.

கல்வி எனும் அதிகாரத்தை பாவோதல் வடிவில் ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் வழங்கினார்.

அதிதி அறிமுக உரையினை தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

திருவள்ளுவம் காட்டும் பெண்மை பற்றிய உரையினை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி கௌசியா நிரோஷன் வழங்கினார்.

ஈழமும் வள்ளுவரும் என்ற பொருளை முதன்மைப்படுத்தி கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

அதிதி பேச்சாளர் கலாசாலை முகாமைத்துவக் குழுமத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

(அ)

## போதைக்கு எதிரான செயற்திட்டம் யாழில்

யாழ்ப்பாணம், மார்ச் 05

முழு நாடும் ஒன்றாகச் செயல்றிட்டத்தின் கீழ் அபாயகர போதைப்பொருளைச் சமூகத்திலிருந்து கட்டுப்படுத்தும் நோக்கில் "அகன்று செல்" செயல்பாட்டின் ஒரு அங்கமாக வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கை நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் நகர் பகுதியில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(அ)

## இறைச்சிக்காக இரவில் மாட்டை கொண்டு சென்ற இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 05

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் நேற்று முன் தினம் இரவு மாட்டுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அனுமதி பத்திரமன்றி இறைச்சிக்காக சட்டவிரோதமாக மாட்டை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற இருவரை வெற்றிலைக்கேணிப் பகுதியில் வைத்து மருதங்கேணி பொலிஸார் கைது செய்தனர்.

மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவே இவ்வாறு அனுமதி பத்திரம் இன்றி இறைச்சிக்காக மாட்டை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்றவேளை இருவரையும் கைது செய்தது.

(அ)

## மத்திய கிழக்கு போர்ப் பதற்ற நிலைமையால் இலங்கை சுற்றுலாத்துறைக்கு பெரும் இழப்பு!

கொழும்பு, மார்ச் 05

மத்திய கிழக்கு வான்வெளி ஒரு வாரத்திற்கு மூடப்படுவதால் இலங்கைக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலா வருவாய் இழப்பு ஏற்படும். ஏனெனில் சுமார் 30 வீத வருகை அந்தப் பகுதி வழியாகவே நடைபெறுகிறது என்று இலங்கை சுற்றுலா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானை தாக்கியதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் போர் நிலைமை அதிகரித்ததைத் தொடர்ந்து சுற்றுலாத் துறைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை இலங்கை சுற்றுலா அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

ஈரானுக்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதி வழியாகவே இலங்கைக்கு பயணிப்பதாகவும், எனவே விமான சேவைகள் இல்லாதது இங்குள்ள சுற்றுலாத்துறையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டார் எயார்வேஸ், எமிரேட்ஸ், பிளைடுபாய் மற்றும் எதிஹாட் போன்ற விமான நிறுவனங்கள் இலங்கைக்கு கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வருவதாக அவர் கூறினார்.

மேலும், மோதல் காரணமாக தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப முடியாமல் இலங்கையில் சுமார் 10,000 சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிப்பதாகவும் அவர் கூறினார்.

(அ)

## இலங்கைக்கு கடத்திச் செல்லவிருந்த மாத்திரைகள் தமிழகத்தில் பறிமுதல்!

சென்னை, மார்ச் 05

தமிழ்நாடு - மண்டபம் அடுத்த மரைக்காயர் பட்டினம் கடற்கரை அருகே உள்ள தோப்பில் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட வயாகரா, வலி நிவாரணி மாத்திரைகள், அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்டவைகளை இராமநாதபுரம் கியூ பிரிவு மற்றும் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதன்போது தப்பி ஓடிய கடத்தல்காரர்களையும் அவர்கள் தேடி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடத்தல் பொருட்களின் இந்திய மதிப்பு ரூபா 10 இலட்சம் எனவும் இதன் சர்வதேச மதிப்பு ரூபா 17 இலட்சம் இருக்கும் எனவும் இராமநாதபுரம் சுங்கத் துறை இணை ஆணையர் தெரிவித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.03.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஜனாதிபதி ஒழிப்பும் மக்களின் மனநிலையும்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் இலங்கை சனத்தொகை கடுமையாகப் பிளவுபட்டிருப்பதாக "றிசேர்ச் லங்கா" ( Research Lanka) நிறுவனத்தின ஆய்வின் மூலம் தெரிய வந்திருக்கிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்று சனத்தொகையில் 50 சதவீதமானவர்கள் விரும்புவதாகவும் மற்றைய 50 சதவீதமானவர்கள் அந்த ஆட்சிமுறை தொடர வேண்டுமென்று விரும்புவதாகவும் ஆய்வு கூறுகிறது. அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரப் போவதில்லை என்று 80 சதவீதமானவர்கள் நம்புவதாகவும் வெறுமனே 20 சதவீதமானவர்களே புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்று நம்புவதாகவும் தெரியவந்திருக்கிறது.

அதேவேளை, தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவரவில்லை என்றால் இலங்கை வேறு ஒரு அரசியலமைப்பை ஒருபோதுமே காணப் போவதில்லை என்றும் ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கிறது.

அரசாங்கங்கள் புதிய அரசியலமைப்பை அவற்றின் பதவிக் காலத்தின் முற்பகுதியில் கொண்டு வருவதே வழமை. இலங்கையின் இரு குடியரசு அரசியலமைப்புக்களும் முறையே சிறிமா பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினாலும் ஜே.ஆர். ஜெயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின லும் அவற்றின் பதவிக் காலங்களின் முற்பகுதியிலேயே கொண்டுவரப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த முதல் மாதங்களில் புதிய அரசியலமைப்பு பற்றிய கேள்விகள் எழுந்தபோது அரசாங்கத் தலைவர்கள் மூன்று வருடங்களுக்கு பின்னர் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படும் என்று கூறினார்கள். இப்போது ஒன்றரை வருடங்கள் கடந்து விட்டன. அரசாங்கம் உள்நாட்டில் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளையும் தற்போதைய சர்வதேச நெருக்கடிகளின் விளைவாக மேலும் தீவிரமடையக்கூடிய பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரக்கூடியதாக நாட்டின் நிலைவரம் அடுத்துவரும் வருடங்களில் இருக்கும் என்று எதிர்பார்ப்பது கஷ்டம்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பைப் பொறுத்தவரை, அதை ஒழிப்பதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கிக் கொண்டு அதிகாரத்துக்கு வந்த எந்த ஜனாதிபதியுமே அதைக் காப்பாற்றவில்லை. தேசிய மக்கள் சக்தியும் அதே வாக்குறுதியை வழங்கியது.

ஆனால், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக கூறிய எந்தவொரு ஜனாதிபதியையும் அடுத்த தேர்தலில் நாட்டு மக்கள் அந்த வாக்குறுதியை. நிறைவேற்றத் தவறியதற்காக தோற்கடிக்கவில்லையே. வாக்குறுதியை மீறியவர்களில் இரு ஜனாதிபதிகள் (சந்திரிகா குமாரதுங்கவும் மகிந்த ராஜபக்சவும்) இரு பதவிக் காலங்களுக்கு அதிகாரத்தில் இருந்தனர். மகிந்த ராஜபக்ச மூன்றாவது பதவிக் காலத்துக்கு தேர்தலில் போட்டியிட்ட வேளையில் அவரது தோல்விக்கு வேறு பல காரணிகளே பங்களிப்புச் செய்தன.

அதனால், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்பது பதவியில் இருந்த ஜனாதிபதிகளை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணி வேட்பாளர்களினால் முக்கியமான வாக்குறுதியாக முன்வைக்கப்பட்டு வந்திருந்தாலும், அது எற்தளவுக்கு பரந்தளவிலான ஒரு வெகுஜனக் கோரிக்கையாக இருந்திருக்கிறது என்பது தொடர்பில் சந்தேகம் இருக்கவே செய்கிறது. மேற்கூறப்பட்ட ஆய்வின் முடிவுகள் அந்த சந்தேகத்தை வலுப்படுத்துகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்துவதாக ஜே.ஆர் வாக்குறுதி அளித்தமைக்காகத்தான் 1977 ஜூலை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை பிரமாண்டமான பெரும்பான்மையுடன் மக்கள் அதிகாரத்துக்கு கொண்டு வந்தார்கள் என்று எவராலும் கூற முடியாது. அதேபோன்றே அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கியவர்கள் வெற்றி பெற்ற தேர்தல்களிலும் அந்த வாக்குறுதிக்காகத்தான் மக்கள் அவர்களை தெரிவுசெய்தார்கள் என்றும் கூறமுடியாது.

ஜனாதிபதி ஆட்சிமுறையும் அது தொடர்பான விவாதமும் தொடரவே செய்யும். ஆனால் மாற்றம் சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

# போதியளவு எரிபொருள் கையிருப்பில் உண்டு குறைந்த விலையில் நெல் வழங்கவேண்டாம்!


### மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன் கோரிக்கை

மன்னார், மார்ச் 05

மன்னார் மாவட்டத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளமையால் விவசாயிகள் நெல்லை குறைந்த விலையில் இடைத்தரகர்களிடம் வழங்கவேண்டாம் எனவும், உலர வைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி நெல்லைப் பாதுகாக்க வேண்டும் எனவும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் திருவள்ளுவர் குருபூசை



வவுனியா, மார்ச் 05

திருவள்ளுவரின் குருபூசை தினம் நேற்று வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இடம்பெற்றது.

இதன்போது திருவள்ளுவரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. திருவள்ளுவர் தொடர்பான நினைவு பேருரையை பாடசாலை மாணவி செல்வி ம.தலிஷா மற்றும் தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் மாநகர சபை செயலாளர் பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# வரணி மத்திய கல்லூரியில் 2 நாள் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், மார்ச் 05


மக்கள் கலை இலக்கியப் பேரவையினால் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாக்களில் முப்பதாவது நிகழ்வு வரணி மத்திய கல்லூரியின் வரும் நாளை வெள்ளிக்கிழமையும், மறுதினம் சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந் நிகழ்வில் மாலை 4 மணிக்கு ஈழத்து நூல்களின் அறிமுகமும் இலக்கியக் கலந்துரையாடலும் நிகழ்வில் எழுத்தாளரும் கலைஞருமான வயிரமுத்து திவ்வியராஜனின் படைப்புலகம் என்ற தலைப்பில் அவரின் ஐந்து நூல்களின் அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வரணி மத்திய கல்லூரியின் அதிபரும் எழுத்தாளருமான இரத்தினசிங்கம் கோகுலராகவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரையினை ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் இ.ம.அன்பரசனும், பிரதிகள் வழங்கலை ஓய்வுநிலை அதிபர் கலாபூஷணம் வயிரமுத்து கந்தசாமியும், நூல் அறிமுக உரைகள் வரிசையில் "மாறிய நாட்களும் மாறாத சூரியனும்" என்ற நூல் பற்றி பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர் சபை உறுப்பினர் நடராஜா கமலாகரனும், "இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் தான் என்ன..." நூல் பற்றி வைத்திய அத்தியட்சகர் தங்கராஜா காண்டீபனும், "ஒரு சின்னக்கதை பாகம் 1" தொடர்பில் தென்மராட்சி வலய தமிழ் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பரஞ்சோதி பரணீதரனும், "சாவை தள்ளிவை" நூல் தொடர்பாக தாதிய பரிபாலகர் டீப்திகா பீரிஸும் , "ஒரு சின்னக்கதை பாகம் 2" பற்றி வரணி சிறீசுப்பிரமணிய வித்தியாலயம் அதிபர் திருநாவுக்கரசு அபராஜிதனும், ஏற்புரையினை நூல்களின் ஆசிரியர் வயிரமுத்து திவ்வியராஜனும் மேற்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் ஆசிரியர் பு.கணேசராசாவின் நெறியாள்கையில் "நேரகாலம்" மற்றும் ஆசிரியர் எல்.சந்திரஹசனின் எழுத்துரு, நெறியாள்கையில் "ஒரு கோப்பை தேனீர்" ஆகிய நாடகங்கள் இடம்பெறும். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 05 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 21
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 01.00
திதி : துவிதியை




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். சொந்த - பந்தங்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**கன்னி**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளி வட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவது நல்லது. மனதிற்கு இதமான செய்தி வரும். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**விருச்சிகம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் டென்ஷன் ஏற்படும். உங்களைப் பற்றிய வதந்திகள் வரும்.

**கும்பம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

# தென்மராட்சி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விவசாயிகள், மீனவருக்கு முன்னுரிமை வழங்குக!

## பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 05

பொதுமக்கள் எரிபொருள் கொள்வனவில் மும்முரம் காட்டி வருவதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயம், கடற்தொழில் போன்ற தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் தனியார் மின்பிறப்பாக்கிகள் மற்றும் இயந்திரங்களை பயன்படுத்தி தொழில் செய்பவர்களும் எரிபொருட்களை கொள்கலன்களில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அதனால் அவர்களுடைய தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமன் சிவபாதம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்மராட்சியில் அமைந்துள்ள கூட்டுறவு மற்றும் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் போக்குவரத்து சேவையில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்கு அவசிய தேவையாக உள்ள எரிபொருட்களை முன்னுரிமை அடிப்படையில் கமநல சேவைகள் நிலையம் மற்றும் அலுவலர்கள் ஊடாக உறுதிப்படுத்தி கொள்கலனில் எரிபொருள் வழங்குவதற்கு தென்மராட்சியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் முன்வர வேண்டும் என அவர் கோரியுள்ளார். (அ)

# மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரைக்கும் ஆலை புனரமைக்கப்பட்டு திறப்பு

மன்னார், மார்ச் 05

மன்னார் - இலுப்பைக் கடவையில் உள்ள மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அரைக்கும் ஆலை புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் எஸ்.அகல்யா ஆகியோர் கலந்துகொண்டதோடு, மன்னார் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், உதவி மாவட்ட செயலாளர் உட்பட பல அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த அரைக்கும் ஆலை, அனைத்து விதமான தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (அ)

# ஏழரை இலட்சம் லீற்றர் பெற்றோல் யாழில் 4 நாள்களில் விற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு நாட்களில் சுமார் ஏழரை இலட்சம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இரவு முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து பெற்றோலை பெற்றுச் சென்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக நீண்ட வரிசைகளில் காத்திருந்து பெற்றோல் பெற்றுக் கொள்ளும் இந்நிலைமை நேற்று புதன்கிழமையும் நீடித்த நிலையில் , கடந்த சனிக்கிழமை முதல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரையில் 7 இலட்சத்து 45 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 4 நாட்களில் சுமார் 5 இலட்சம் லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்யப்படும் நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் என்ற பயத்தின் காரணமாக தேவைக்கு அதிகமான நுகர்வு செய்யப்படுவதால், 4 நாட்களில் சுமார் இரண்டரை இலட்சம் லீற்றர் பெற்றோல் மேலதிகமாக நுகரப்பட்டுள்ளது.

# கைதடி கூட்டுறவு எரிபொருள் நிலையத்துக்கு மண்ணெண்ணெய் தாங்கி அமைக்கவேண்டும்!

## பசுந்தேசம் அமைப்பு ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 05


கைதடி சந்தியில் அமைந்துள்ள தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய மண்ணெண்ணெய் தாங்கி பல முறை திருத்தம் செய்தபோதும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

பல ஆண்டுகளாக கைதடி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணையை பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலைமை நீடித்து வருகின்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள சூழலிலும் குறிப்பாக தென்மராட்சி மேற்குப் பகுதியில் விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் அதிகம் பயன்படுத்தும் மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இவற்றினைக் கருத்திற்கொண்டு விரைவாக விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பயன்பெறக்கூடிய வகையில் புதிய மண்ணெண்ணை தாங்கி மற்றும் அதற்கு தேவையான டிஜிற்றல் மீற்றர் பம்பிகள் உள்ளிட்டவை பொருத்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பசுந்தேசம் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# கிளிநொச்சி மாவட்டத்தின் வீடமைப்பு அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

கிளிநொச்சி, மார்ச் 05



கிளிநொச்சி மாவட்டத்தின் வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்கதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டங்கள், வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்பு திட்டங்கள், 2018 காலப்பகுதியில் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் நிலை உள்ளிட்ட வீடமைப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் கருணாதிலக, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தற்போதைய நிலை; ஐ.நா. பிரதிநிதி பேராயருடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 05

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிரான்ஞ், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளார்.



இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து இரு தரப்பினரும் நீண்டநேரம் ஆலோசித்தனர். குறிப்பாக, நாட்டில் நீதியை நிலைநாட்டுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால சவால்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இலங்கையில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவது குறித்தும், அனைத்துச் சமூகங்களுக்குமிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. நீதிமிக்க முன்னேற்றப் பாதையை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தன் முக்கியத்துவத்தை இருவரும் வலியுறுத்தினர்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வி மறுசீரமைப்பு செயல்முறைகள் குறித்து இச்சந்திப்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், நாட்டின் நீண்டகால தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலைத்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

நாட்டின் சமூக மற்றும் அரசியல் சூழலில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஒரு செல்வாக்கு மிக்க குரலாக விளங்கும் நிலையில், சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியுடனான இந்தச் சந்திப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

(அ)

# கிராம சேவையாளர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, மார்ச் 05

கொடுப்பனவு விவகாரம் மற்றும் இழப்பீடு வழங்கும் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, கிராம சேவையாளர்கள், முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டம் நாடளாவிய ரீதியில் தொடர்கிறது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் இடர் முகாமைத்துவ கடமைகளிலிருந்து தாம் விலகியுள்ளதாகத் தெரிவித்துள்ள தொழிற்சங்கக் கூட்டமைப்பு, இதில் 99 சதவீதமான அதிகாரிகள் பங்கேற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் முதல் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமக்கு போதிய மேலதிக கொடுப்பனவுகளோ அல்லது முறையான வசதிகளோ வழங்கப்படவில்லை என அதிகாரிகள் குற்றம் சாட்டு கின்றனர்.

குறிப்பாக, 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட நாளாந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளதோடு, தற்போது வழங்கப்படும் பயணக் கொடுப்பனவுகளப்பணிகளுக்கு எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், சேத விவரங்களைச் சரியாக மதிப்பிடாமல் 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கும் அரசின் தற்போதைய நடைமுறை குறித்து அதிகாரிகள் கடும் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மின்மாற்றியில் தீ விபத்து!

கொழும்பு, மார்ச் 05

களுத்துறை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள ஒரு மின்மாற்றியில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்து சுமார் 20 நிமிடங்கள் நீடித்ததாகவும், இதனால் மின்மாற்றி அலகு பகுதியளவு சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

களுத்துறை நகராட்சி மன்ற தீயணைப்பு படை மற்றும் லங்கா மின்சார நிறுவனத்தின் ஊழியர்களின் கூட்டு முயற்சியால் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்த சம்பவம் சுற்றியுள்ள பகுதியில் உள்ள பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டிகள் மாணவர்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 05

பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் வருடாந்த கிரிக்கெட் போட்டிகள் தொடர்பில் இலங்கை பொலிஸார் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த வருடாந்த போட்டிகளில் கலந்துகொள்பவர்களின் ஒழுக்கம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், போக்குவரத்து விதிகளை மீறாமல் அணிவகுப்புகளின்போது முறையாக நடந்துகொள்ளுமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யூ.வுட்லர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் காலப்பகுதியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பாடசாலையின் கௌரவம் பாதிக்கப்படாதவாறு பொது இடங்களில் கண்ணியமாக நடந்துகொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மீனவர்களுக்கு எரிபொருளை விநியோகிக்க அரசு ஏற்பாடு!

கொழும்பு, மார்ச் 05

கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை உரியவாறு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான நிலமை ஓரிரு வாரங்களில் வழமைக்கு திரும்பும் என அமைச்சர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு கடற்றொழிலாளர்கள் ஏதேனும் சிக்கலை எதிர்நோக்கினால், அதனை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# சர்ச்சைக்குரிய நிலக்கரி இறக்குமதி விசாரணை அறிக்கை கையளிப்பு

கொழும்பு, மார்ச் 05

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்காக ஒன்பது நிலக்கரி கப்பல்கள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகள் குறித்த தனது அறிக்கையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் கையளித்துள்ளது.

சர்ச்சைக்குரிய நிலக்கரி இறக்குமதி தொடர்பான பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கை, குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் விடுத்த பணிப்புரைக்கு அமைவாக, உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தலைமையிலான உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் பணிப்புரைக்கமைய, தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமை குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்திருந்தது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த யுவதியின் சடலம் துஷ்பிரயோகம் சபையில் கேள்வியெழுப்பிய இராதா எம்.பி.

கொழும்பு, மார்ச் 05


டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் பிணவறையில் வைக்கப்பட்டிருந்த இறந்த யுவதி ஒருவரின் சடலத்தை துஷ்பிரயோகம் மேற்கொண்ட மூன்று வைத்தியசாலை ஊழியர்கள் தொடர்பாக, டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு முன் பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் சபையில் கேள்வியெழுப்பினர்.

இதன்போது, ஒரு உயிரிழந்த யுவதியின் சடலத்துக்குக்கூட பாதுகாப்பின்மை காணப்படுகின்றமையை சுட்டிக்காட்டிய அவர், உரிய அதிகாரிகள், சுகாதார அமைச்சர் இதற்கு பதிலளிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குபதிலளித்த, சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அதற்குரிய பதிலை ஆராய்ந்து பாராளுமன்றில் முன்னளிப்பதாக உத்தரவாதம் அளித்தார். (அ)

# நிந்தவூர் இமாம் றூமி வீதிக்கு காப்பெற் இடும் பணி ஆரம்பம்



அம்பாறை, மார்ச் 05

நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் இருந்த நிந்தவூர் இமாம் றூமி வீதிக்கு சுமார் 1 கோடி 40 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் காப்பெற் இடும் பணி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கரையோரப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவினால் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லதீப், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அக்கரைப்பற்று பிராந்திய பிரதம பொறியியாளர் ஏ.எம்.உவைஸ், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஸட்.ஏ.எம்.அஸ்மி ஆகியோர் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்



திருமலை, மார்ச் 05

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன் தினம் திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாயச் செயல்பாடுகள் மற்றும் பயிர் உற்பத்தி நிலைவரங்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக, விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் தரமான விதை வழங்கல் நடைமுறைகள் தொடர்பாகவும், பயிர்ச்செய்கைக்கு அவசியமான நீர்ப்பாசன வசதிகளை உறுதிப்படுத்துவது குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

முந்தைய கூட்டங்களில் எட்டப்பட்ட தீர்மானங்களின் தற்போதைய செயல்பாட்டு முன்னேற்றம் குறித்து இதன்போது மதிப்பீடு செய்யப்பட்டது.

நிலுவையில் உள்ள திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கிய அரசாங்க அதிபர், விவசாயிகளின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். (அ)

# காரைதீவு வைத்தியசாலையில் சிரமதானம்



அம்பாறை, மார்ச் 05

காரைதீவு பிரதேச சபையின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் சிரமதானம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலை பொறுப்பு அதிகாரி மருத்துவர் அஜந்தா சுரேஸ் விடுத்த வேண்டுகோளையேற்று பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன் இந்த நடவடிக்கையை தமது ஊழியர்கள் சகிதம் மேற்கொண்டார்.

அதனால் வைத்தியசாலையின் உள், வெளி சூழல்கள் சுத்தமாக்கப்பட்டன. (அ)

# வைத்தியசாலை சென்ற பெண் இதுவரை வீடு திரும்பவில்லை!

மட்டக்களப்பு, மார்ச் 05

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத் திற்குட்பட்ட நாற்பதாம் கிராமம் (வம்மியடியூற்று) எனும் கிராமத்தைச் சேரந்த 45 வயதுடைய நளாயினி எனும் குடும்பப் பெண் ஒருவரை காணவில்லை என அவரது உயவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை குறித்த பெண் பழுகாமம் வைத்தியசாலைக்குச் சென்று பின்னர் பழுகாமத்திலிருக்கின்ற வங்கி ஒன்றுக்கும் சென்றுவிட்டு அன்றைய தினம் முற்பல் 11 மணியளவில் மீண்டும் அவரது வீடு செல்வதற்காக பஸ்ஸூக்காக காத்திருந்துள்ளார். அன்றைய தினம் 11 மணிவரை அப்பெண்ணின் பைபேசி தொடர்பிலிருந்துள்ளது. 11 மணிக்குப் பின்னர் அவரது தொலைபேசி இயங்கவில்லை எனவும், எனினும் குறித்த பெண் இதுவரை அவரது வீடு வந்து சேரவில்லை எனவும் அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் அவரது உறவினர்கள் வெல்லாவெளி மற்றும் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

# இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்குப் பணிப்பாளராக ஹமீர்



அம்பாறை, மார்ச் 05

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஏ. ஹமீர், நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

சாய்ந்தமருதில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணக் தலைமைக் காரியாலயத்தில் இந்த நிகழ்வு இ ம்பெற்றது.

இந்நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் பங்கேற்றனர்.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பிரதேசத்தை சேர்ந்த இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது முஸ்லிம் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்கு நவீன கண் பரிசோதனை இயந்திரம்

## கொமர்ஷல் வங்கி வழங்கியது



மட்டக்களப்பு, மார்ச் 05

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், கொமர்ஷல் வங்கியினால் சுமார் 25 இலட்சம் பெறுமதியான நவீன கண் பரிசோதனை இயந்திரங்கள் ஒன்று கடந்த செவ்வாய்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் கே.புவனேந்திரநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு குறிப்பிட்ட இயந்திரத்தினை உத்தியோகபூர்வமாக வழங்கினர்.

இந்த இந்த நவீன கண் பரிசோனை இயந்திரம் வைத்தியசாலைக்கு வருகை தரும் கண் நோயாளர்களின் பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் அப்பகுதி நோயாளிகளுக்கு உயர்தரமான சேவையை வழங்கவுள்ளதாக களுவாஞ்சிகுடி தோர வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவின்...

தாக்குதல் தொடர்பான காணொளியையும் வெளியிட்டிருக்கிறது.

நேற்றுக் காலை முதல் காலியை அண்மித்த கடற்பரப்பில் கடற்கலமொன்று எரிந்தபடி நீரில் மூழ்குவதாகவும், கடற்கலம் தாக்குதலுக்கு உள்ளாகியதன் காரணமாகவே மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டபோதிலும் நேற்று மாலை வரை சுயாதீன செய்தி வட்டாரங்கள் எவையும் அதனை உறுதி செய்யவில்லை.

எனினும், ஈரானுக்குச் சொந்தமான "ஐரிஸ் டேனா" என்ற பெயருடைய இந்தக் கடற்கலத்தை "டோப்பிற்றோ" தாக்குதல் மூலம் நீருக்கடியில் வைத்துத் தாக்கி அழித்ததாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் இலங்கை நேரப்படி நேற்று முன்னிரவு உறுதிப்படுத்தினார்.

மேலும், சர்வதேச கடலில் பாதுகாப்பாக இருப்பதாக கருதப்பட்ட இரானிய போர்க் கப்பல் ஒன்றை இந்தியப் பெருங்கடலில் வைத்து நீர்மூழ்கிக் குண்டினால் அமெரிக்கா மூழ்கடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கடற்கலத்தில் பயணித்த சுமார் 180 இற்கும் அதிகமான ஈரானிய கடற்படையினரில் 110 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது, கொல்லப்பட்டவர்களினுடையதெனக் கருதப்படும் சடலங்கள் பலவற்றை இலங்கைக் கடற்படையினர் மீட்ட வண்ணமுள்ளனர். நேற்றிரவு இந்தச் செய்தி எழுதப்படும் வரை சுமார் 80 சடலங்கள் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டிருந்தன.

தாக்குதலின் போது காயமடைந்த 32 பேர் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு, காலி - கராப்பிடி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், எரிகாயங்கள், வெட்டுக் காயங்களுடன் மற்றும் என்பு முறிவுக்குட்பட்ட பலர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கடற்படையில் ஊடகப் பேச்சாளர் புத்திக சம்பத் குறிப்பிடுகையில், "நேற்று அதிகாலை 05.08 மணியளவில் கிடைத்த பேரிடர் அழைப்பைத் தொடர்ந்து இலங்கை கடற்படைக் கப்பல்கள் உடனடியாக அனுப்பப்பட்டன, மேலும் விமானப்படையுடன் கூட்டு மீட்பு நடவடிக்கையும் தொடங்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற பகுதி இலங்கையின் கடல் ஆதிக்கத்துக்கு அப்பாற்பட்ட பகுதி ஆயினும் அவசரத்துக்கு உதவி செய்ய வேண்டிய அயலிலுள்ள நாடு என்ற வகையில் கடற்படையினரும், விமானப்படையினரும் இணைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்" என்றும், சம்பவ இடத்துக்குச் சென்ற வேளையில் கடற்பரப்பில் கடற் கலம் எதையும் காண முடியவில்லை. கடற்பரப்பில் சிந்திக் கிடந்த எண்ணெய்ப் படலங்களை வைத்தே கலம் மூழ்கடிக்கப்பட்ட பகுதியை அடையாளப்படுத்த முடிந்தது என்றும், கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வெளிநாட்டவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், கடற்படையினரின் மீட்புப் பணிகளின் போது சம்பவத்தில் கொல்லப்பட்ட பலரது சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், இந்தச் சம்பவம் பற்றிய முழுமையான தகவல்கள் வெளிவருதற்கு முன்னரே நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் இது தொடர்பாகச் சபையில் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரது கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நேற்றுக் காலை அதிகாலை காலி கடற்கரையிலிருந்து 40 கடல் மைல் தொலைவில் ஈரானிய கடற்படைக் கப்பல் விபத்துக்குள்ளானதாக அறிவித்ததை அடுத்து, அதில் சுமார் 180 பேர் இருந்ததாகவும், அவர்களை மீட்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தாக்குதலுக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்ட "ஐரிஸ் டேனா" என்ற போர்க் கப்பல் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கடற்படைக்குச் சொந்தமான மிகப் பலம் பெருந்திய போர்க் கலங்களில் ஒன்றாகும். பல ஏவுகணைகளையும், பீரங்கிகளையும் தன்னகத்தே கொண்டிருந்த இந்தக் கடற்போர்க் கலம் கடந்த மாதம் பயிற்சி நடவடிக்கை ஒன்றுக்காக இந்தியாவின் விசாகப்பட்டணம் துறைமுகத்துக்கு வந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-ஒ)

## ஐக்கிய அரபு...

பயங்கரவாதத்தையும் கண்டிப்பதோடு, இலங்கையின் ஒருமைப்பாட்டை அவருக்கு உறுதிப்படுத்தினேன். இலங்கை உறுதியாக ஐக்கிய அரபு அமீரகத்துடன் நிற்பதுடன், எவ்வகையிலும் உதவத் தயாராக உள்ளது" என தொலைபேசி அழைப்பு குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

## மனிதாபிமான...

சொந்தமான "ஐரிஸ் டேனா" என்ற கப்பல் விபத்துக்குள்ளாகியுள்ளதாக தகவல் கிடைத்தது.

அதிகாலை 5:08 மணியளவில் கடற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு இந்த அவசர செய்தி கிடைத்தது. இதனையடுத்து உடனடியாகச் செயல்பட்ட இலங்கை கடற்படை, காலை 6:00 மற்றும் 7:00 மணியளவில் மீட்புப் படகுகளை அனுப்பி வைத்தது.

விமானப்படை மற்றும் கடற்படை இணைந்து நடத்திய இந்தச் சிறப்பான நடவடிக்கையின் மூலம், கடும் ஆபத்தில் இருந்த சுமார் 32 பேர் மீட்கப்பட்டனர். அந்த கப்பலில் சுமார் 180 பேர் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மீட்கப்பட்டவர்கள் அவசர சிகிச்சைக்காக தற்போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

1979 ஆம் ஆண்டின் "சர்வதேச கடல்சார் தேடல் மற்றும் மீட்பு" உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

அந்த உடன்படிக்கையின்படி, கடலில் ஆபத்தில் இருக்கும் எவருக்கும் அவர்களின் தேசியத்தைப் பாராது மனிதாபிமான அடிப்படையில் உதவ வேண்டியது இலங்கையின் கடமையாகும் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்தியது-என்றார். (அ)

## போர்ச் சூழலால்...

ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய நிலைமைகளை கணிப்பது சாத்தியமற்றது என்றாலும், அனைத்துத் துறைகளிலும் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளைத் தொடர்ந்து கண்காணித்து அந்த சவால்களை வெற்றிகொள்ள ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்கள் மற்றும் கையிருப்புத் தேவைகளை நிர்வகித்தல், சுற்றுலா, ஏற்றுமதி, முதலீடு போன்ற துறைகளிலும், உணவுப் பாதுகாப்பு குறித்து ஏற்படக்கூடிய நிலைமைகள் மற்றும் இதன் மூலம் இந்நாட்டில் பணவீக்கத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் தொடர்பிலும் அதை நிர்வகிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன. இந்த சூழ்நிலையால் இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும், சாதாரண மக்களின் வாழ்க்கைக்கும் ஏற்படும் தாக்கத்தைக் குறைத்து, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தற்போதைய எரிபொருள் கையிருப்பு போதுமானதாக இருந்தாலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்ள தேவையான கையிருப்புகளைப் பேணுவது மற்றும் அதனை நிர்வகித்தல், உலக சந்தையில் ஏற்படவிருக்கும் எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இந்த நிலைமைகளை நிர்வகிப்பது குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, இது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

எரிவாயு கையிருப்புகளைப் பேணுவதற்கு போதுமான களஞ்சிய வசதிகள் இல்லாததால் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளைத் தேடுவது குறித்தும், அதற்காக பின்பற்றக்கூடிய குறுகிய கால மூலோபாயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சூயஸ் கால்வாய் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி போன்ற இடங்கள் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகள் காரணமாக கொழும்பு துறைமுகத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக, இலங்கையுடன் நீண்ட காலமாக இணைந்து பணியாற்றி வரும் கப்பல் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில், அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டில் தற்போது போதுமான உணவுக் கையிருப்பு உள்ளதாகவும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திரராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி.எம்.ஆர். ஜி. அபோன்சு, சுங்க பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் பராக்கிரம திசாநாயக்க ஆகியோருடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை முதலீட்டு சபை போன்ற துறைசார் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## யாழுக்கு...

செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து கேரளக் கஞ்சாவை படகில் கடத்தி வருவதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

படகில் மூவர் கஞ்சாவை கடத்தி வந்து கரை சேர்க்க முற்பட்டவேளை கரையில் பதுங்கியிருந்த பொலிஸார் அவர்களை கைது செய்ய முற்பட்டனர். மூவரும் தப்பியோட முயன்ற நிலையில் ஒருவரை மடக்கி பிடித்ததுடன், மற்றைய இருவரும் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

கடத்தி வந்த கஞ்சாப் பொதிகள் , கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகு மற்றும் அதற்கான வெளியிணைப்பு இயந்திரம் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட நபரை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் வேலணை பகுதியை சேர்ந்த 35 வயதுடையவர் என தெரிவித்த பொலிஸார் , அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் , தப்பியோடிய நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ)

## ஈரான் உயர்...

வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு தனது செய்தியைப் பதிவு செய்தார்.

அமைச்சர் விஜித ஹேரத் விடுத்துள்ள இரங்கல் செய்தியில்-

"ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மறைவு குறித்து ஈரான் இஸ்லாமிய குடியரசிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பதவிக்காலத்தில் இலங்கை மற்றும் ஈரான் இடையிலான இருதரப்பு உறவுகள் கணிசமான முறையில் விரிவடைந்தன. ஈரான் வழங்கி வரும் நட்புறவை இலங்கை இப்போதும் உயர்வாக மதிக்கிறது. இந்த துயரமான வேளையில் எமது எண்ணங்கள் ஈரான் நாட்டு மக்களுடன் நிலைத்திருக்கும்." - என்று தெரிவித்துள்ளார். (அ)

## தையிட்டியில்...

ஆகியோர் மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றனர்.

பொலிஸாரின் தாக்குதல் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராக வலி. கிழக்கு தவிசாளர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், நேற்று புதன்கிழமை முறைப்பாட்டாளரையும் , எதிராளியான பொலிஸாரையும் தமது அலுவலகத்திற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டார்.

குறித்த விசாரணைகள் தொடர்பில் வலி. கிழக்கு தவிசாளர் தெரிவிக்கையில்-

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராடிய எம் மீது பொலிஸார் சித்திரவதைகளை புரிந்து உடல் உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தி எம்மை கைது செய்தனர். அரசாங்கத்தின் திட்டமிட்ட அறிவுறுத்தலின் பிரகாரமே பொலிஸார் எம்முடன் அவ்வாறு நடந்து கொண்டனர் என வலுவான சந்தேகம் எமக்கு உண்டு.

இன்றைய விசாரணைகளின்போது, விகாரைக்கு சிங்கள மக்களும் வருகை தந்தமையால் போராட்டக்காரர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாது தடுக்கவே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தோம். அவர்களை கைது செய்யும்போது குறைந்தளவு பல பிரயோகத்தையே மேற்கொண்டோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் எம்மை தேடி தேடி கைது செய்ததுடன், பொலிஸாரின் தடைக்கு அப்பால் எம்மை இழுத்து சென்று தாக்குதல் மேற்கொண்டே வாகனத்தில் ஏற்றினார்கள் என விடயத்தையும் விசாரணைகளில் நான் தெரியப்படுத்தினேன். எம் மீதான தாக்குதல்கள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பிலான ஆதாரங்கள் , சாட்சியங்கள் , அறிக்கைகள் என்பவற்றை எதிர்வரும் 14 நாட்களுக்குள் தமக்கு சமர்ப் பிக்குமாறும் , அதன் பின்னர் கொழும்பு அலுவலகத்திற்கு மேலதிக நடவடிக்கைக்காக தாம் அனுப்பி வைப்போம் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார் என தவிசாளர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஈரான் தூதரகம்...

இரங்கலையும் தெரிவித்தார்.

அவ்வாறே, தற்சமயம் நடந்து வரும் போர் சூழலால் ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், சவூதி அரேபியா, ஜோர்தான் மற்றும் குவைத் உள்ளிட்ட மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உயிரிழந்த மக்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தனது அனுதாபங்களையும் இரங்கலையும் இதன்போது தெரிவித்தார். இந்த மோதல்கள் முடிவுக்கு வந்து, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அமைதியும் சமாதானமும் நிலவட்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இங்கு பிரார்த்தித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 2026 அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்வதற்கு உரிய ஆளணி வசதி!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 05

2026ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை எவ்வளவு விரைவாக நிறைவு செய்ய முடியுமோ அவ்வளவு துரிதமாக நிறைவு செய்யுமாறும், அதற்காகத் தேவைப்படும் தொழில்நுட்ப ஆளணியின் ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகிய அமைச்சுக்களின் இந்த ஆண்டுக்கான செயற்றிட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை காலை ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர், மாகாண சபையின் வழமையான நிதி, "டித்வா" பேரிடர் பாதிப்புக்கான நிதி, மத்திய நிரல் அமைச்சுக்களின் நிதி, மாவட்டச் செயலகங்களின் நிதி, உள்ளூராட்சி மன்றங்களின் சபை நிதி மற்றும் முத்திரைத் தீர்வை நிதி எனப் பல்வேறு நிதி மூலங்களினூடான வேலைத் திட்டங்களை நாம் இந்த ஆண்டு முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும். எமக்கு இப்போதுள்ள சாதகமான காலநிலையைப் பயன்படுத்திப் பணிகளை விரைவாக ஆரம்பிப்பது இலகுவானது. எனவே, திட்டங்களை உரிய கால வரையறைக்குள் நிறைவு செய்வதுடன், அவற்றின் உயர்தரத்தையும் அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், என வலியுறுத்தினார்.

குடிபுகுச் சான்றிதழ் இன்றி இயங்கும் வர்த்தக நிறுவனங்களால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்படும் வருமான இழப்புகள் தொடர்பில் ஆளுநர் விசேட கவனம் செலுத்தினார். "குடிபுகுச் சான்றிதழ் இல்லையென்பதைக் காரணங்காட்டி உரிய வரி அறவீடுகள் செய்யப்படாமையால், சபைகளுக்குப் பெரும் நிதி இழப்பு ஏற்படுகின்றது. இதனை மறுசீரமைக்குமாறு பல தடவைகள் அறிவுறுத்தியுள்ளேன். இதற்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும். ஆகக் குறைந்தது 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கட்டடங்களுக்காவது இதனை இறுக்கமாக நடைமுறைப்படுத்துங்கள், என ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான ஒவ்வொரு திணைக்களங்களினதும் துறைசார் முன்னேற்ற மீளாய்வுகள் நடைபெற்றன. 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் தற்போது கோரப்பட்டு வருவதாக இதன்போது அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், மாகாணப் பணிப்பாளர்கள், மாநகர சபைகளின் ஆணையாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். (அ)

# தாய்நாட்டை முதன்மைப்படுத்த தவறுகின்றார் ஜனாதிபதி அநுர!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாய்நாட்டை எப்போதும் முதன்மைப்படுத்தியவர் என தெரிவித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, தற்போதைய ஜனாதிபதி நாட்டை அவ்வாறு பார்க்வில்லையென தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்

பொதுஜன பெரமுன கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறும் அரசியல் குழு மற்றும் செயற் குழு கூட்டங்களில் எதிர்கால அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடிமட்ட மக்களின் ஆதரவும் மீண்டும் தமது கட்சிக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உருவாகும் நெருக்கடிகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கத் தவறிவிட்டதாக குற்றம் சாட்டிய அவர், 323 கொள்கலன் விடுவிப்பு மற்றும் நிலக்கரி கொள்வனவு தொடர்பான விசாரணைகள் வெளிப்படையாக நடைபெறவில்லை என்றார்.

மேலும், ஒரு பிரச்னையை மறைக்க மற்றொரு பிரச்னையை உருவாக்கும் அரசாங்கமாக இது மாறியுள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

உலக யுத்த சூழ்நிலையைப் பற்றியும் கருத்து தெரிவித்த அவர், போரை இலங்கை ஆதரிக்காது என்றும், உலக அமைதி விரைவில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (அ)

# பெண் பணியாளர் மீது பாலியல் அத்துமீறல் விசாரணை அறிக்கை சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 05

பாராளுமன்றத்தின் தகவல் அமைப்புகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான இறுதி விசாரணை அறிக்கை நேற்று சபாநாயகரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து வெளிப்படையான விசாரணை நடத்துவதற்கு 2025 ஜூலை 25 அன்று பாராளுமன்ற ஊழியர் ஆலோசனைக் குழு தீர்மானித்திருந்தது.

இதற்கமைய, ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் சுஜாதா அலஹப்பெருமவால் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

அவர் தனது இறுதி அறிக்கையை 2025 நவம்பர் 24 அன்று சபாநாயகரிடம் கையளித்திருந்தார்.

பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் தீர்மானத்திற்கமைய, இந்த அறிக்கை நேற்று உத்தியோகபூர்வமாக சபையில் வைக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் பார்வைக்காக இதன் பிரதி ஒன்று பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மத்திய கிழக்கிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம்

## நாமல் ராஜபக்ஷ அழைப்பு

கொழும்பு, மார்ச் 05

மத்திய கிழக்கு உட்பட பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளிலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமீபத்திய நாட்களில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் கட்டடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களால் பொதுமக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதனால் பொதுமக்கள் அச்சத்தில் தங்குமிடம் தேடவேண்டியுள்ளது.

பொதுமக்கள் ஒருபோதும் எந்தவொரு இராணுவ நடவடிக்கைக்கோ அல்லது போருக்கோ இலக்காகி மரணிக்கக்கூடாது என்று நான் நம்புகிறேன். மேலும் மத்திய கிழக்கு உட்பட பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளிலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து தரப்பினரையும் நாங்கள் அழைக்கிறோம். ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தற்போது அங்கு பணியாற்றுவதால் மத்திய கிழக்கு பிராந்தியம் இலங்கைக்கு முக்கியமானது - என்றார். (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படாது!

## விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 05

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் விஜயதாஸ, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என தெரிவித்தார்.

அரசாங்கம் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது என உறுதிப்படுத்தியுள்ளதால் மக்கள் தேவையற்ற முறையில் வரிசைகளில் நிற்காமல் இருக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, கான்களில் எரிபொருள் வழங்குவதற்கான தடை காரணமாக விவசாயிகள் சிரமம் எதிர்கொள்வதாகவும், அவர்களுக்கு தேவையான எரிபொருளைப் பெறுவதற்கான மாற்று நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உலகளாவிய யுத்த சூழ்நிலைகளின் தாக்கம் காரணமாக எரிபொருள் விலை உயர்வும் விமான சேவைகளில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# டொனால்ட் ட்ரம்ப்பை கண்டு அஞ்சுகிறதா இலங்கை அரசு?

## ரோஹித அபேகுணவர்த்தன சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 05

அரசாங்கம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பைக் கண்டு அஞ்சுகின்றதா என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரம்ழான் நோன்பு என்பது இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது, உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் மக்களுக்கு மிக முக்கியமான ஒரு ஆன்மீக கடமையாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீமும் கூட தற்போது நோன்பு நோற்றுள்ள ஒருவராக இங்கு சமூகமளித்துள்ளார்.

இவ்வாறு நோன்பில் இருந்த தருணத்தில் தான் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் இஸ்ரேலால் ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரான் மக்கள் நோன்பில் இருந்த தருணத்தில் பாடசாலை மாணவர்கள் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்க தலைவரே இதனை செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சண்டியரை போன்று செயற்படுகின்றார். அனைத்து நாடுகளையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த விடயம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன ? அதனை தைரியமாக அரசாங்கம் கூறவேண்டும். மக்கள் விடுதலை முன்னணி எதிரணியில் இருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? இப்போது அமைதி காக்கின்றனர் அமெரிக்க ஜனாதிபதியை கண்டு அரசாங்கம் அஞ்சுகின்றதா? - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.